# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110221

1. District மாவட்டம் : Nilgiris PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 02 Date: நாள் 21.08.2020

2. (i) Act சட்டம்: PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7.
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 06.07.2020 Date to : நாள் வரை 21.08.2020
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.08.2020 Time : நேரம் 11.00hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : எழுத்து மூலமாக (கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் உதகமண்டலம் நகராட்சி அலுவலகம். சுமார் 01.05km மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ம. பிரபு (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் மாரியப்பா
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 36 வயது (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் ஓட்டுநர் (g) Address : முகவரி தீட்டுக்கல், பெர்ன்ஹில் (p), உதகமண்டலம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   சத்திய ஆரோக்கியநாதன், வருவாய் உதவியாளர்
   நகராட்சி அலுவலகம், உதகமண்டலம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   \

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. Rabin 21-08-2020

Bhagyalakshmi 21/8/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 21.08.2020
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் பி. பாக்யலட்சுமி
Rank: நிலை .................... No. எண் ..........
காவல் ஆய்வாளர்
உ.த.க பிரிவு, திருச்சி மாவட்டம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.2/2020/AC/NI u/s 7 of Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் விவரம்;-**

21.08.2020-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலக அலுவலில் இருந்த போது நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், பெரன்ஹில் அஞ்சல், தீட்டுக்கல், மரியப்பா என்பவரது மகன் திரு.M.பிரபு என்பவர் அலுவலகம் வந்தார். அவரை அலுவலக நுழைவாயிலில் நிறுத்தி அவரை விசாரிக்க, அவர் புகார் கொடுக்க வந்திருப்பதாக கூறினார். முதலில் அவரது கைகளை நன்கு சோப்பு போட்டு கழுவ செய்தும், பின்னர் அவரது உடல் வெப்ப நிலையையும், ஆக்ஸிஜன் அளவையும் சரிபார்க்கப்பட்டது. உடல் வெப்ப நிலையும், ஆக்ஸிஜன் அளவும் சீராக இருந்தது. அதன்பிறகு அவரை அலுவலகத்திற்குள் அழைத்து அவர் வைத்திருந்த புகார் மனுவை பெற்றேன். அந்த புகார் மனுவானது கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. நான் அந்த புகாரினை படித்து பார்த்தேன். புகார் சம்மந்தமாக ரகசிய விசாரணையும் மேற்கொண்டேன். அந்த புகாரின் அடிப்படையில் எதிரி குறித்து இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரியானவர் அரசு பணி செய்வதற்கு லஞ்சம் வாங்குபவர் என்றும், புகாரில் சொல்லப்பட்டது போல் புகார்தாரரிடம் உதகமண்டலம் நகராட்சி அலுவலக வருவாய் உதவியாளர் திரு.சத்திய ஆரோக்கியநாதன் உதகமண்டலம் நகராட்சியில் அவருக்கு பணியமர்த்தப்பட்ட வார்டுகளில் சொத்துவரி மற்றும் இதர வரி செலுத்த வரும் பொதுமக்களிடம் லஞ்சமாக பணம் கேட்டுவந்தது தெரியவந்தது. மேலும் புகார்தாரரின் முன் நடத்தை மற்றும் புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் தெரியவந்தது. மேலும் புகாரின் உண்மைதன்மையயும், நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்தும் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 21.08.2020-ம் தேதி காலை 11.00 மணிக்கு உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.2/2020/AC/NI-ல் ஊழல் தடுப்பு சட்ட பிரிவு 7-ன் படி, மேற்படி எதிரி திரு.சத்திய ஆரோக்கியநாதன், வருவாய் உதவியாளர், உதகமண்டலம் நகராட்சி அவர்கள் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு:- நான் நீலகிரி மாவட்டம், உதகை தீட்டுக்கல்லில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான்

Geethalakshmi
21/8/2020

உதகையிலுள்ள பாரத் கேஸ் கம்பெனியில் தற்காலிக லாரி ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். எனக்கு சொந்தமாக வீடு இல்லாத காரணத்தினால், ஒரு வீடு கட்ட யோசித்து உதகையிலுள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய அலுவலகத்தில் சென்று விசாரித்து மனு கொடுத்தேன். அவர்கள் மனுவை வாங்கி வைத்துவிட்டு வீடு கட்ட எனது பெயரில் குறைந்த பட்சம் 300 சதுர அடி நிலமிருந்தால் மானியம் தருவதாக கூறினார்கள். அதனால் நான் எனது அண்ணன் திரு.சிவசங்கரிடம் பேசி அவருக்கு சொந்தமாக தீட்டுக்கல்லில் இருந்த பழைய சர்வே நம்பர்.3102/11 புதிய சர்வே நம்பர் எப்-2-23 கொண்ட நிலத்திலிருந்து ஒரு செண்ட் நிலத்தை எனக்கு தானமாகக் கொடுப்பதாக கூறினார். அதன்படி அவர் எனக்கு கடந்த 07.11.2017 ஆம் தேதி உதகை சப் ரிஜிஸ்டர் அலுவலகத்தில் டாக்குமெண்ட் நம்பர் 1279/2017-ன் படி ஒரு செண்ட் நிலத்தை பதிவு செய்து கொடுத்தார். பின்னர் நான் உதகையிலுள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த அலுவலரிடம் பதிவு செய்த டாக்குமெண்ட் நகலை கொடுத்தேன். குடிசை மாற்று வாரிய செயல்முறை ஆணை எண்.258/இநிபொ(தி)/2017-ன் படி நான் ரூ.2,10,000/-ஐ நான்கு தவணைகளில் மானியமாக பெற்று வீடு கட்டி முடித்தேன். பின்னர் நான் கட்டிய வீட்டிற்கு வரி விதிக்கக் கோரி கடந்த 17.06.2020-ஆம் தேதி உதகை முனிசிபல் அலுவலகத்திற்கு சென்று சொத்து வரி விதிப்பு கோரும் விண்ணப்பம் நம்பர் 1639-ஐ பெற்று எங்கள் ஏரியா பில் கலெக்டர் திரு.சத்திய ஆரோக்கியநாதன் அவர்களிடம் பூர்த்தி செய்த விண்ணபத்தினையும் அது சம்மந்தபட்ட ஆவணங்களையும் கொடுத்தேன். மேலும் அன்றைய தினமே காலி பூமிக்கான சொத்து வரியாக ரூ.50/- செலுத்தி அதற்கான ரசீது எண்.968/02/03/20-21/0002375 நாள்:17.06.2020-ஐ பெற்றுக் கொண்டேன். பின்னர் பில் கலெக்டர் திரு.சத்திய ஆரோக்கியநாதன் ரசீதையும் பெற்றுக்கொண்டு வீட்டை அளப்பதற்கு நேரில் வருவதாக கூறி எனது கைப்பேசி எண்ணை வாங்கிக் கொண்டார். அதன்பிறகு 06.07.2020 ஆம் தேதி நான் எனது கைப்பேசி மூலம் பில்கலெக்டர் சத்திய ஆரோக்கியநாதனை தொடர்பு கொண்டேன். அதற்கு அவர் அன்றைய தினமே எனது வீடு உள்ள தீட்டுக்கல் ஏரியாவிற்கு வந்து எனது வீட்டை அளந்தார். பின்னர் நான் அவரிடம் வரியை எங்கே செலுத்த வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் வீட்டு வரி ரூ.5,000/- வரை ஆகும். மேற்கொண்டு வீட்டை மதிப்பீடு செய்து வரி செலுத்த ரூ.20,000/-ஐ லஞ்சமாக கொடுத்தால் மனுவினை பரிந்துரை செய்து அனுப்பி வைப்பேன் என்று கூறினார். நான் அவ்வளவு பணம் தர இயலாது என்று சொன்னபோது அவர் ரூ.25,000/-ஐ எடுத்துக்கொண்டு முனிசிபால் அலுவலகம் வந்து அவரை பார்த்தால் தான் வேலையை

Geethalakshmi
21/8/2020

முடித்துக்கொடுப்பதாகக்கூறி அங்கிருந்து சென்றுவிட்டார். நான் லாரி ஓட்டுநராக இருப்பதால் எனக்கு தினக்கூலிதான் தருவார்கள். அதனால் என்னால் பணம் ரூ.25,000/-ஐ ஏற்பாடு செய்ய முடியவில்லை. கடந்த 17.08.2020 ஆம் தேதி மாலை சுமார் 4.30 மணியளவில் நான் உதகை முனிசிபால் அலுவலகம் சென்று திரு.சத்திய ஆரோக்கியநாதன் அவர்களை பார்த்து என்னால் பணம் ரூ.25,000/-ஐ ஏற்பாடு செய்யமுடியவில்லை மிகவும் கஷ்டமாக இருக்கிறது என்று சொன்னேன். அதற்கு அவர் வரி மற்றும் லஞ்ச பணமும் சேர்த்து 15,000/- ரூபாயை வரும் 21.08.2020 வெள்ளிக்கிழமை கொண்டுவருமாறும், அப்படி கொடுத்தால்தான் எனது மனுவை பரிந்துரை செய்து அனுப்பி வைப்பேன் என்றும், இல்லையென்றால் மனுவை தள்ளுபடி செய்து விடுவதாகவும், அப்படி மனுவை தள்ளுபடி செய்தால் மீண்டும் புதியதாக மனு அளிக்க வேண்டும் என்றும் கண்டிப்புடன் கூறினார். நான் வீட்டிற்கு சென்று யோசித்ததில், அரசு வேலைக்காக லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லாததால் லஞ்ச ஒழிப்புத்துறையில் உதகை முனிசிபால் அலுவலக பில் கலெக்டர் திரு. சத்திய ஆரோக்கியநாதன் மீது நடவடிக்கை எடுக்க புகார் அளிக்க முடிவு செய்து அவர் கேட்ட பணம் ரூ.15,000/-ஐ ரெடி செய்து இன்று (21.08.2020) காலை எனது வீட்டின் வரி விதிப்பு மனுவை பரிந்துரை செய்ய லஞ்சம் கேட்கும் உதகை முனிசிபால் அலுவலக பில் கலெக்டர் திரு. சத்திய ஆரோக்கியநாதன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க தங்களிடம் புகார் மனு அளிக்கிறேன். இப்படிக்கு ஒப்பம் (XXXX) 21.08.2020 M.பிரபு). Submitted: Received the above complaint on 21.08.2020 at 10.00 hrs and after conducting a preliminary enquiry, registered a case in V & AC, The Nilgiris Cr.No.2/2020 u/s 7 of PC (Amendment) Act 2018 on 21.08.2020 at 11.00 hrs. Sd (XXXX) 21.08.2020 Inspr, VAC, The Nilgiris. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் நீதிபதி, சிறப்பு நீதிமன்றம், உதகமண்டலம் அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டன.

Vijayalakshmi
21/8/2020
காவல் ஆய்வாளர்
ஊ.த.க. பிரிவு, நீலகிரி மாவட்டம்